
ISSN 2278 - 1641
UGC Care Listed Journal

# புதுப்புனல்


மலர் : 14 இதழ் : 9+ ரு. 150/- செப்டம்பர் சிறப்பிதழ் 2023

புதுப்புனல் இதழ் துவங்கிய செப்டம்பரைக் கொண்டாடுவோம்

# செப்டம்பர் சிறப்பிதழ்



http://puthupunal2009.blogspot.com



# புதுப்புனல்


கலை இலக்கிய மாத இதழ்
pudhupunal@gmail.com

செல் : 9962376282
9884427997

ஆசிரியர்
இரா. இரவிச்சந்திரன்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி ரவிச்சந்திரன்

தனி இதழ் : ரூ. 100/-
ஆண்டு சந்தா : ரூ. 1200/-
3 ஆண்டு சந்தா : ரூ. 3500/-
ஆயுள் சந்தா : ரூ. 15000/-

வெளிநாட்டு ஆண்டுச்சந்தா :
ரூ. 10000/-

வெளிநாட்டு
3 ஆண்டுச் சந்தா:
ரூ. 25000/-

புதுப்புனல் வளர்ச்சிக்கான நன்கொடை மற்றும் சந்தா தொகையை PUDHU PUNAL என்ற பெயரில் இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி திருவல்லிக்கேணி கிளையில் (C/A NO. 009802000007279) IFSC - IOBA0000098 பணமாக வங்கியிலும் செலுத்தலாம் மற்றும் Gpay : 99623 76282 எண்ணிலும் மேலும் பணவிடையாகவோ வரைவோலையாகவோ காசோலையாகவோ கீழ்காணும் முகவரிக்கு அனுப்புக.

புதுப்புனல்
117, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
(முதல் மாடி) திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005. (தபால் பெட்டி எதிரில்)


# உள்ளடக்கம்

## ஆய்வு கட்டுரைகள்


1. புறநானூற்றில் மனித அறக்கோட்பாடுகள் — பொ. அகத்தியமலை 6
2. திருப்பதிசாரம் - திருவாழ்மார்பர் ஆலயம் — தி. அல்பா. பிரேம் 9
3. குறிஞ்சித்திணை மக்களின் பிறத்திணைத் தொடர்புகள் — பா. செ. ஆஷா 11
4. நச்சினார்க்கினியர் பெயராப் பாடல்களும் அகத்திணை மரபுகளும் — பெ. அசோககுமார் 14
5. பள்ளு இலக்கியங்கள் காட்டும் சமய வழிபாடு — ஜெ. தேவராஜன் 16
6. இலக்கியத்தில் மானிட அறம் — ஜெ. தேவிகா 19
7. அச்சு ஊடகமும் தமிழ்மொழியும் — ச. இளங்கோ 22
8. செஞ்சி வட்டார புழங்கு பொருட்கள் — கா. காமராஜ் 25
9. வெ. இறையன்புவின் நின்னிலும் நல்லன் சிறுகதை உணர்த்தும் சமூகவியல் சிந்தனைகள் — செ. இம்மானுவேல் தினகரன் 28
10. தொல்காப்பியரின் கிளவியாக்கம் கூறும் தொடர் மொழியாக்கச் சிந்தனைகள் — பா. ஜெயபுனிதாராஜேஸ்வரி 32
11. ''ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் : வரலாறு ஓர் அறிமுகம் — சி. ஜெயராம் சக்கரவர்த்தி 35
12. மங்களாவழ கதைகள் நாவலில் பெண்கதை மாந்தர்களின் கல்வியால் ஏற்பட்ட வளர்ச்சி — ஜோ. ஜீவா 38
13. ஐசக் அருமைராசனின் சிறுகதைகளில் வாழ்வியல் சிக்கல்கள் — ரா. ஜான்சி ராணி 40
14. புறநானூற்றில் மெய்ப்பாடு — கோ. திவ்யபாரதி 43
15. முல்லைத்திணை கோட்பாடுகள் — க. கவிதா 45
16. ஓதி எறியப்படாத முட்டைகள் என்ற நாவல் உணர்த்தும் சமுதாய நிலைகள் — கி.ஷீபா 49
17. திருக்குறள் கூறும் அறச்சிந்தனைகள் — ம. அருணா 51
18. புயலிலே ஒரு தோணி கூறும் வாழ்வியல் தத்துவங்கள் — மு. ஜான்சி 53
19. ஆற்றுப்படை நூல்களில் காணலாகும் உவம உருபுகள் — மு. செல்வக்குமார் 56
20. இலக்கியங்களின் வழி இறைநெறி — த. மைவிழி 59
21. முரசு கடந்து வந்தப் பாதை — கோ. மலர்விழி 61
22. பழமலய் கவிதையும் பொதுவுடைமைக் கோட்பாட்டுச் சிந்தனையும் — கொ. மணிமாறன் 64
23. மேலாண்மை பொன்னுச்சாமி சிறுகதைகளில் தொழில்கள் — மு.பாலசுப்பிரமணியன் 67
24. ஆற்றுப்படை இலக்கியங்களில் வாழ்வியல் அறங்கள் — பி. முத்துலெட்சுமி 70
25. ஐங்குறுநூற்றில் இல்லாளின் இன்னல்கள் — ம. நந்தினி 72
26. ரமணிச்சந்திரன் புதினங்கள் காட்டும் குடும்ப உறவுகள் — ஜெ. நித்தியகல்யாணி 76
27. மூன்றாம் உலகப்போரில் இயற்கைச் சூழல் — பெ. சுமதி 78
28. காட்டுநாயக்கர் இன மக்களின் திருமண முறை — கி. ராம்கணேஷ் 81
29. குமார செல்வாவின் குன்னிமுத்து நாவல் வழி அறியலாகும் பெண்ணடிமையின் இயல்பு — ரெ.ரேகா 84
30. குறிஞ்சி நில மக்களின் பொழுதுகளும், வாழ்வியலும் — செ. தீபா 87
31. சங்ககாலக் கருவூர்ப் புலவர்களின் பாடல்கள் காட்டும் செய்திகள் — க. செல்வக்குமார் 89
32. தங்கர்பச்சானின் வாழ்வும் பணியும் — ஹா. சாம்ராஜ் 92
33. கோட்டை பொம்மக்காவில் உவமைகள் — இரா. கலைச்செல்வி 95
34. கவிஞர் முடியரசனாரின் பூங்கொடியில் கட்டமைப்புச் சிந்தனைகள் — சி. ஆரோக்கிய தனராஜ் 97
35. இரண்டாம் இடம் நாவலில் பெருமித உணர்வு — தி. சித்ரா 101

# திருப்பதிசாரம் - திருவாழ்மார்பர் ஆலயம்

ஆய்வாளர்
பி.அல்பா.கிரேஸ்
முனைவர்பட்ட ஆய்வாளர், (பகுதிநேரம்)
தமிழாய்வு மையம்,
முஸ்லிம் கலைக்கல்லூரி,
திருவிதாங்கோடு,
கன்னியாகுமரி மாவட்டம்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

நெறியாளர்
முனைவர் த. மினி
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
முஸ்லிம் கலைக்கல்லூரி,
திருவிதாங்கோடு

## முன்னுரை

பழம் பெருமை வாய்ந்த ஆலயங்களுள் திருப்பதிசாரம், திருவாழ்மார்பர் ஆலயமும் ஒன்றாகும். இது 108 வைணவத் திருத்தலங்களுள் ஒன்று. நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலமாகும். ...னுக்கு பக்திரால் முக்கியம் மற்றவை இரண்டாம் பட்சம் ... பறைசாற்றும் விதமாய் வெளி உலகிற்கு எடுத்துக்காட்ட 41 ...ள் குழந்தைக்கு அருள்காட்டிய அற்புதமான சம்பவம் நடந்த இடம் தான் திருப்பதிசாரம்.

## கோயில் அமைவிடம்

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவிலுக்கு வடமேற்கில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், நாகர்கோவிலில் இருந்து திருநெல்வேலி செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலும், குமரி முனையிலிருந்து பதினைந்து ...மீ தொலைவில் திருப்பதிசாரம் அமைந்துள்ளது.

## ஊரின் சிறப்பு

திருப்பதிசாரம் பல சிறிய கிராமங்களைக் கொண்டு செயல்படும் ஒரு கிராமப் பஞ்சாயத்தாகும்.

"வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேயமொன் றுளததன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே"

என்று மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை சிறப்பித்து கூறுகிறார். (மனோன்மணியம் அங்கம் 2, களம் 1 அடி 75- 77)

அதாவது, மாம்பும் நெல்லும் உற்பத்தி செய்து வஞ்சி நாட்டை வளப்படுத்து வந்த திருவிதாங்கூரில் கருவூலமாக திகழ்ந்த நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியாக வளம் பெற்று விளங்குகிறது. அதுமட்டுமின்றி தேரேகால் புதூர் சானலும், பழையாறும் பாய்ந்து ஊருக்கு வளம் சேர்க்கின்றன.

'ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட நூற்றி எட்டு வைணவத் திருப்பதிகளில் மலைநாட்டில் அமைந்துள்ள பதிமூன்று வைணவத் திருப்பதிகளுள் ஒன்றாக திகழும் பெருமை வாய்ந்தது. திருப்பதி வெங்கடாசலபதியை 'வட திருப்பதி' என்பது போல் இத்தலத்தைத் 'தென்திருப்பதி' என்று மக்கள் சிறப்பித்து கூறுகின்றனர்.

மேலும் நம்மாழ்வாரின் திருத்தாயாரான உடையநங்கை நாச்சியார் அவதரித்த திருத்தலம் என்ற சிறப்பையும் இவ்வூர் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி, "நம்மாழ்வாரும் இவ்வூரில் தான் பிறந்தார் என்பது இவ்வூர் மக்களின் கருத்தாகும்". (பத்மநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், ப.80)

## பெயர்க்காரணம்

திருப்பதிசாரத்தின் பழைய பெயர் 'திருவெண்பரிசாரம்' என மக்கள் கூறுகின்றனர். அதைப் பற்றிய கருத்துக்கள் கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது என்கின்றனர். 'திருவெண்பரிசாரம்' என்ற பெயர் 'திருப்பதிசாரம்' என்று திரிந்து தற்போது திருப்பதிசாரம் என்றே மருவி மக்களிடம் வழக்கத்தில் வழங்கி வருகின்றது. முதியோர்கள் பலர் இப்போதும் திருவெண்பரிசாரம் என்றே குறிப்பிடுகின்றனர்.

## திருவெண்பரிசாரம் குறித்த கதை

திருவெண்பரிசாரம் என்ற பெயரின் காரணத்திற்கு மக்கள் ஒரு கதையை கூறுகின்றனர். அக்கதையானது, சேரமன்னன் குலசேகரன் பல தேசங்களை போரில் வென்று திரும்பிய போது அவனுடைய வெண்குதிரை காணாமற் போனது. பல இடங்களிலெல்லாம் தேடி இறுதியில் சோமதீர்த்தக்கரையில் நந்தவனத்தில் மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டு மகிழ்ந்த மன்னன் அவ்விடத்திற்கு திருவெண்பரிசாரம் எனப் பெயரிட்டதாக முன்னோர் கூறியதாக மக்களிடம் இன்றும் கதை நிலவி வருகிறது.

1956-ம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின் (மைய சட்டம் 37/56) கீழ் முன்னாள் திருவிதாங்கூர் கொச்சி அரசாங்க ஆட்சியிலிருந்து, பின்பு தமிழ்நாடு அரசின் ஆளுகைக்கு 1956-ல் மாற்றப்பட்டது. தமிழ்நாட்டுடன் இணைவதற்கு முன்பும் இணைந்த பின்பும் தற்போதைய நிலவரித் திட்டத்தின் பின்பும் திருப்பதிசாரம் என்ற பெயரிலேயே அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் உள்ள கொல்லம் 961-ஆம் (கி.பி.1786) ஆண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று 'திருப்பதிசாரம்' என்று குறிப்பிடுகின்றது. எனவே "18ம் நூற்றாண்டிலிருந்தே 'திருவெண்பரிசாரம்' திருப்பதிசாரமாக வழக்கேறிவிட்டது தெரிய வருகின்றது". (அ.கா.பெருமாள் தென்குமரிக் கோவில்கள் ப.231)

## தலபுராணம்

ஒரு காலத்தில் சுசீந்திரத்தை அடுத்துள்ள ஞானாரண்யத்தில் (தற்போதைய ஆசிரமம்) சப்தரிஷிகள் இறைவனை நோக்கித் தவமிருந்தனர். இறைவன் சிவன் உருவில் அவர்களுக்கு காட்சிதர

...வரிசையில் இறைவனைத் திருமாலின் உருவில் காண வேண்டி ...த்திலிருந்து தாங்கு வைக்கும் தொலைவிலுள்ள கோயிலுக்குச் ...லிலுள்ள அரச மரத்தடியில் இருந்து தவம் செய்தவராம். ...தவரும் அவர்கள் தவத்துக் கிரங்கி திருமாலின் உருவில் காட்சியளித்ததாக பத்மநாபன் தலபுராணம் நூலில் குறிப்பிடுகிறார். (குமரிமாவட்டக் கோவில்கள் பக்.80)

## திருவாழ்மார்பர் கோயில்

திருப்பதிசாரம் கோயிலின் மூலவர் திருவாழ்மார்பன். இவரை திருக்குறளப்பன் எனவும் அழைப்பதாகவும் மக்கள் வாய்மொழி கூறுகின்றனர். திருமாலே இலக்குமியை தன் மார்பிலே தாங்கி வீற்றிருப்பதால் இப்பெயர் பெற்றுள்ளார். மேலும் நாயகர் காவலையிடி நாச்சியார். இக்கோயிலில் தீர்த்தம் லட்சுமி தீர்த்தம். சோம தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்திர கல்யாண விமான அமைப்பை இக்கோயில் கொண்டுள்ளது. இங்கு தேவி மூலவரின் மார்பில் உறைவதாகக் கருதப்படுவதால் தேவிக்கென்று தனிச்சன்னதி இல்லை.

## தேரும் தீர்த்தமும்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான தேரிருந்த சிறப்பு வேலைப்பாடுடையதாகும். இராமாயணக் காட்சிகளைச் சிறக்குடன் தேரில் வடிவமைத்துள்ளார் சிற்பி. தேர் செய்த தலைமை ஆசாரி இவ்வூரைச் சார்ந்தவர் என்ற கருத்தும் மக்களிடம் நிலவுகிறது. கோவிலின் முன்பு 'சோமலட்சுமி தீர்த்தம்' என்னும் பெரிய குளம் காணப்படுகிறது. நரசிங்க அவதாரத்திற்கு பின்பு, இறைவனின் கொடூர தோற்றம் மாற வேண்டி, தேவி இத்தீர்த்தக்கரையில் உள்ள அரச மரத்தடியில் வந்து தவமியற்றியதால் இது இப்பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

## இலக்கியச் செய்திகள்

நம்மாழ்வாரின் திருவாய்மொழி எட்டாம் பத்தில் அங்கும் இங்கும் என்ற தலைப்பில் (எம்பெருமானிடம் அன்புடையவர் எங்கும் உள்ளனர்) திருப்பதிசார திருவாழ்மார்பன் பற்றிய 11 பாடல்கள் உள்ளன. அதில் ஒரு பாடலானது

"வருவார் செல்வார் வண்பரி சாரத்திருந்த என்
திருவாழ் மார்பர்க்கு என்திறம் சொல்வார் - செய்வதென்
உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு
ஒருபாடு உழல்வான் ஓரடியானும் உளனென்றே"

என்ற பாடலில், திருவெண்பரிசாரத்தில் உறைந்த திருவெழுமார்பனே! சங்கு, சக்கரம் ஏந்திய கையனே! உன் கார் நிறைக்காண விரும்புகிறேன். உன் திருவடிக்குள் ஆட்கொள்வாய் மூவுலகையும் அடக்கிய திருவிக்ரமனே! திருமாலே! பாற்கடல் கடைந்தவனே எனப் பெருமானைப் பாராட்டுகிறார்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் நூற்றெட்டு திருப்பதி அந்தாதியில்

"அடியும் குளிர்ந்தான் அறிவும் குலைந்தான்
முடிகின்றான் மூச்சடங்கும் முன்னே - கடிதொடிப்
பெண்பரிகாரம் இப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசாரம் கிடந்த மார்க்கு".

என இக்கோவில் மூலவரைக் கிடந்த கோலமுடையவராகக் காட்டுகிறார்.

## கல்வெட்டுச் செய்திகள்

திருப்பதிசாரத்தில் கண்டெடுத்த மூன்று கல்வெட்டுக்களை திருவிதாங்கூர் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் பதிப்பித்துள்ளனர். அவற்றுள் பழமையானது கொல்லம் 4வது ஆம் (1129) ஆண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டு முந்தியும் சிதைந்து விட்டதால் கோயில் பற்றிய எந்தத் தகவலும் அறிய முடியவில்லை. பிற இரண்டு கல்வெட்டுகளும் 17,18 ஆம் நூற்றாண்டில் காலத்திலிருந்து பக்தர்கள் வந்து காணிக்கை செலுத்தி வணங்கி சென்றதைக் குறிக்கின்றன.

## விழாக்கள்

ஆராட்டாதி, வைகுண்ட ஏகாதசி ஆகியவை இக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவனவாகும். அதுமட்டுமின்றி ஆவணியில் திருவோணம், புரட்டாசி, சனிக்கிழமைகள், திருக்கார்த்திகை ஆகிய விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சித்திரை மாதத்தில் 'பிரம்மோற்சவம்' என்னும் பெருந்திருவிழா பத்து நாட்கள் சிறப்பாகவும் தற்போதுவரை கொண்டாடப்படுகிறது.

## மக்களின் நம்பிக்கை

இவ்வூர் திருப்பதியின் சாரம் என்றும் இத்திருப்பதியிலுறையும் இறைவனைத்தொழுதால்திருப்பதியில் உறையும் இறைவனைச் சேவிக்கும் பலன் உண்டு என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே வேரூன்றிக் கிடக்கின்றது.

திருமணத்தடை, குழந்தை பாக்கியம், தீடிய வாழ்வு, செல்வ செழுமை, தோஷங்கள் போன்றவை நீங்க இறைவனை மனமுருகி பிரார்த்தித்தால் போதும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் நிலவுகிறது.

## கோயில் சிறப்புகள்

- மூலவர் 'கடு சர்க்கரை யோகம்' (கல்லும் சுண்ணாம்பும் சேர்த்து உருவத்தின் மேல் கடுகும், சக்கரையும் சேர்த்து ஒரு வித பசையால் பூசப்படும் முறை) என்ற [illegible] அமைக்கப்பட்டுள்ளார்.
- மூலவருக்கு திருமஞ்சனம் கிடையாது. உற்சவருக்கு தான் திருமஞ்சனம் செய்வர்.
- 108 வைணவ திவ்ய தேசங்களில் 88 வது திவ்ய தேசமாக திருப்பதிசாரம் போற்றப்படுகிறது.
- நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த தலமாகும். மேலும் நம்மாழ்வாரின் தாயார் பிறந்த தலம் என்ற பெருமை கொண்டது.

## திறக்கும் நேரம்

திருப்பதிசாரம் கோவில் காலை 6 மணி முதல் 11 மணி வரையும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் மக்கள் தரிசனத்திற்காக திறந்திருக்கும். முடிவுரை இவ்வாறு நின்ற, இருந்த, கிடந்த கோலங்களில் இருந்த கோலத்தில் [illegible] காட்சியளிப்பது குமரிமாவட்ட திருப்பதிசாரக் கோவில். நம்மாழ்வாரால் பாடல் பெற்ற வைணவ ஆலயம் திருப்பதிசாரம் திருவாழ்மார்பன் ஆலயம் விளங்குகிறது.

## துணைநூற்பட்டியல்

1) அ.கா.பெருமாள்- தென்குமரிக் கோவில்கள்,
2) பத்மநாபன்.எஸ்.- கன்னியாகுமரி மாவட்டக் கோவில்கள்